2022 அக்டோபர் 19]

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏனெனில், ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் நடத்தப்படும் பதிவு பெற்ற முதியோர் இல்லங்கள் மொத்தம் 22 செயல்பட்டு வருகின்றன. அதில் மதுராந்தகம் தொகுதியிலேயே வில்லவராயன் நகரில் மாநில அரசின்கீழ் மானியம் பெறும் Duraisamy Generous Social Education Association *என்ற மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த இல்லமும், ஒன்றிய அரசின் மானியம் பெறும்* Bureau of Integrated Rural Development *என்ற ஓர் இல்லம் பெரும்பேர் கண்டிகை கிராமம், தொழுப்பேட்டிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மதுராந்தகம் தொகுதியில் புதிதாக ஆதரவற்ற முதியோருக்கான முதியோர் இல்லம் அல்லது ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்கள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை நிறுவிட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில் அவ்வில்லங்களுக்கு அரசின் மானியங்களை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துதல்

***14292—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் மழைக் காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 19

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் மழைக் காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த அரசு தொடர்ந்து உரிய நடவடிக்கைகளைக் கால்நடை நிலையங்கள்மூலம் எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இப்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கியிருக்கிறது. தமிழகத்தில் கிட்டத்தட்ட 7 கோடி கால்நடைகள் இருக்கின்றன. பசு மாடுகள், எருமை மாடுகள் வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் உட்பட சுமார் 7 கோடிக்கும் மேலாக இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில் நிறைய உங்களுக்கு இருக்குமே!*

திரு. நயினார் நாகேந்திரன்: *நெல்லை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 8 இலட்சம் கால்நடைகள் இருக்கின்றன. பருவமழை தொடங்குகின்றபோது எல்லா கால்நடைகளுக்குமே கோமாரி நோய், சப்பை நோய் போன்ற பல நோய்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, கடந்த பருவ மழைக் காலங்களில் பல முகாம்கள் நடத்தி எல்லா கால்நடைகளுக்கும் அந்த நோய்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு பருவமழை தொடங்கும்போது அதே நோய்கள் திரும்ப வருவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதனால், எல்லா கால்நடைகளுக்கும் அந்தத் தடுப்பூசிகளை நிச்சயமாகப் போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு; சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு. ஒரு மாடு இருந்தாலே போதும் ஒரு குடும்பமே வாழும். மாடு கேட்டால் மாண்புமிகு முதல்வர் எனக்குத் தரவேயில்லை. ஒரு மாடு இருந்தாலே அது ஒரு பெரும் இலட்சுமிகடாட்சம்*

2022 அக்டோபர் 19]

என்பார்கள். பெரும் செல்வம் அது. அதைப் பாதுகாப்பதில் நமது அரசு முனைப்போடு இருக்க வேண்டும்.

முற்பகல் 10–50

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தமட்டில், எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆனால், கால்நடைகள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான ஒரு முழுநேர அவசர சிகிச்சைப் பிரிவு அங்கு இல்லை. என்னுடைய மூன்று வருட கன்றுக்குட்டிக்குக் கடந்த வாரம் திடீரென்று காய்ச்சல் வந்தது. அது மூளைநோய் என்று சொல்கிறார்கள். அது என்ன நோய் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது Blood, tissue *போன்றவற்றையெல்லாம் எடுத்து* test–*க்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த மாதிரி ஒரு விஷக் காய்ச்சல் வருகிறது. 105 டிகிரி விஷக் காய்ச்சல் வந்து, கை, கால்கள் நடக்க முடியாமல், எல்லா கால்நடைகளும் அங்கே கீழே படுத்துவிடுகின்றன. அதன் பிறகு, என்னவாயிற்று என்றால், அதைத் தூக்கிக் கொண்டு செல்ல முடியவில்லை. அங்கேயே இருந்தால்தான் முடியும். அதை 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு தள்ளி தூக்கிக் கொண்டு சென்றுவிட்டு, திரும்பக் கொண்டு வந்துவிட்டு, மீண்டும் அதைத் தூக்கிக் கொண்டு செல்ல முடியாது. அதனால், அந்த மாதிரி கால்நடைகளுக்கு, அங்கேயே தங்கியிருந்து சிகிச்சைப் பெறுவதற்கு ஓர் அவசர சிகிச்சைப் பிரிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் கால்நடைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆண்டும் தமிழகம் முழுவதும் 7,560 சிறப்பு கால்நடை சிகிச்சை மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த உத்தரவிட்டுள்ளார்கள். அந்தவகையிலே ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் 20 முகாம்கள் வீதம் 180 சிறப்பு கால்நடை சிகிச்சை மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட,*

[2022 அக்டோபர் 19

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதியுடன், நேற்றையதினம் நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்நத்தம், கீழூர் கிராமத்தில் இந்த வருடத்திற்கான முதல் முகாம் நடத்தப்பட்டது. அதுபோல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற எல்லா பகுதிகளிலும் இதுபோன்று மருத்துவ முகாம்கள் நடத்தி, என்னென்ன நோய்கள், எங்கெங்கு பரவுமோ அவற்றிற்கான தடுப்பூசிகளைப் போடுவதற்குண்டான நடவடிக்கைகளை எங்களுடைய துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதுமா, அவ்வளவுதானா? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற கால்நடைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற விதத்தில், அரசின் மூலமாக கோசாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோசாலைகள் என்பது இந்து சமய அறநிலையத் துறைமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. அதுபோன்று, இன்றைக்கு இதற்கான திட்டமும் எங்களுடைய துறையிலே வெகு சீக்கிரத்தில் எந்தெந்த இடத்தில் அனாதைகளாக, பாதிக்கப்பட்டிருக்கின்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவை இருக்கிறதோ, அந்தப் பகுதியில்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: ஆதரவற்ற கால்நடைகளுக்கு என்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்ற வகையிலே, அதற்கான ஒரு திட்டத்தை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அது வெகு சீக்கிரத்தில் செயல்படுத்தப்படும்.

2022 அக்டோபர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

வட்ட வழங்கல் அலுவலகத்திற்குக் கட்டடம்

*12706—திரு. K. மாரிமுத்து:

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி வட்ட வழங்கல் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரம், கச்சேரி சாலை, வார்டு A, Block 8, 1.31.00 ஹெக்டேர் பரப்பில் தற்போது அரசு அலுவலகக் கட்டடங்கள் செயல்பட்டு வரும் இடத்தில், வாடகை ஏதும் இன்றி வட்ட வழங்கல் அலுவலகம் செயல்பட்டு வருவதாலும், கட்டடம் நல்ல நிலையில் இருப்பதாலும், தற்போது புதிய வட்ட வழங்கல் அலுவலகக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளாகத்தில் இருக்கிற கட்டடம் நூறு ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டடம் ஆகும். அதே வளாகத்தில் இருந்த நீதிமன்றம் புதிய கட்டடத்திற்குச் சென்றுவிட்டது; அதே வளாகத்தில் இருந்த காவல் நிலையம் புதிய கட்டடத்திற்குச் சென்றிருக்கிறது; அதே கட்டட வளாகத்தில், அதே காலங்களில் கட்டப்பட்ட வட்டாட்சியர்*